உ

சிவமயம்

# கபிலானந்தம்





வெளியீடு:- மீசாலை கிழக்கு

பாலையடிப் பிள்ளையார் ஆலயம்

தொகுப்பாசிரியர்:- சைவப்புலவர்

திரு . குமாரசாமி சுமுகலிங்கம் ஜே.பி

தபாற்கந்தோர் வீதி

சாவகச்சேரி

## ஆலயத்தில் செய்யக்கூடாதவை

கர்ப்ப கிரஹகத்தில் கடவுளுக்கு அலங்காரம் நடக்கையில் திரையிட்டுருப்பார்கள் அச்சமயம் வழிபடுதல் கூடாது.

சுவாமிக்கும் பலி பீடத்திற்கும் குறுக்கே செல்லக்கூடாது.

சிவ நிர்மாலயங்களை தாண்டக்கூடாது.

த்வஜஸ்தம்பம், பலிபீடம்,விக்ரஹம் ஆகியவற்றின் நிழலை மிதித்தல் கூடாது.

சுவாமிகளை தொடுவது, சுவாமிகளின் திருவடிக்கடியில் கற்புரம் ஏற்றுதல் கூடாது.

கோயிலை வேகமாக வலம் வருதல் கூடாது. அடிமேல் அடி வைத்து வரவேண்டும்.

கோயிலுக்குள்ளேயோ, கோவில் மதிற் புறங்களிலோ எச்சில் துப்புதல், மலங்கழித்தல் கூடாது.

விபூதி,சந்தனம் குங்குமம் போன்ற பிரசாதங்களை ஒருவருக்கொருவர் இட்டுக் கொள்ளுதலும் கூடாது.

சட்டை அணிந்து செல்வதை தவிர்ப்பது நல்லது.

போதை வஸ்துக்கள், தீன்பண்டங்களை வாயில் வைத்துக் கொண்டு ஆலயத்தினுள் பிரவேசிக்கக் கூடாது.

உ

சிவமயம்

# கபிலானந்தம்





வெளியீடு:- மீசாலை கிழக்கு

பாலையடிப் பிள்ளையார் ஆலயம்

தொகுப்பாசிரியர்:- சைவப்புலவர்

திரு . குமாரசாமி சுமுகலிங்கம் J.P

தபாற்கந்தோர் வீதி

சாவகச்சேரி

## நூற்பட்டியல்


தலைப்பு :- கபிலானந்தம்

தொகுப்பாசிரியர் :- திரு.குமாரசாமிசுமுகலிங்கம்

வெளியீடு :-மீசாலை கிழக்கு பாலையடிப் பிள்ளையார் ஆலயம்

பதிப்பு : பொதிகை புத்தக நிலையம் & பதிப்பகம். 114 கண்டி வீதி சாவகச்சேரி

வெளியீட்டுத் திகதி :- 10.12.2007

பதிப்புரிமை :- ஆசிரியருக்கு

எழுத்து :- 12 புள்ளிகள்

தாள் :- 70 கிராம்

பிரதிகள் :- 300


வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! மனிதநேயம் காப்போம்.

# பொருளடக்கம்

1. ஆசி உரை
2. வாழ்த்து உரை
3. என்னுரை
4. தலவரலாறு
5. திருப்பள்ளியெழுச்சி
6. விநாயக அவதாரம், வழிபாடு
7. திருமருகல்
8. திருச்செங்காட்டங்குடி
9 கணபதீச்சரம்
10. கணபதீச்சரப்பதிகம்
11. பிள்ளையார் கதை
12. போற்றி திருஅகவல்
13. வருகைக் கோவை
14. ஔவையார் அருளிய விநாயகர் அகவல்
15. திருவூயஞ்சல்
16. நூற் பயன்
17. வாழ்த்து



உ

சிவமயம்

# கபிலானந்தம்
## கணபதி வணக்கம்

காப்பு

திருச்சிற்றம்பலம்

கஜமுக நாயகா கணபதி தேவா
கணங்களின் நாயகா கலைகளின் தலைவா
கருணைவடிவானவா கயிலைமலை வாசா
கலை ஞானம் தரவேண்டும் காருண்ய தேவா

பாலையடி நாயனாரே பரம் பொருளின் சொரூபமே
பலவடிவம் பலநாமம் பரம் பொருளின் திருவருளே
பரவசமாய் பாரினில் பல்லோரும் போற்றுகின்றோம்
பாலச்சந்திரன், பாலகணபதி, பக்திகணபதி, முத்திகணபதி

முன்வந்து அருளிடுவீர் வீரகத்தி விநாயகரே
நால் வேதப் பொருளே நல்லருளே நல்கிடுவீர்
நல்லருள் தந்து நூல்ப் பெயரொன்று நல்கிடுவீர்
ஞான ஒளியே ஞாலத்தின் முதலே
வரவேண்டும் வரவேண்டும்

சக்தியுமை பாலனே பாலையடி உறைந்தவனே - உம்மை
பணிந்து ஏற்றி பாடவே பாமாலை வேண்டுகின்றோம்
கபிலானந்தம் தந்திடவே (நின்) பாதம் பணிந்தேற்றுகின்றேன்
பக்திமாலை பாமாலை பரமனருட் புகழ்மாலை
பக்தியுடன் துதிசெய்ய துன்பங்கள் துடைத்தருள
தும்பிக்கை நாயகனே துணைசெய்யவந்தவனே
கபிலானந்தம் கைதவள தும்பிக்கை நாயகனே காப்பு.

திருச்சிற்றம்பலம்

உ

ஓம் சக்தி

குருவே துணை

அருத்திரு தில்லை நடேசானந்த பழனி ஆண்டவர் சுவாமிகள்
குமரகோட்டம் முத்துமாரி அம்மன் ஆலயம், மீசாலை மேற்கு,





வழங்கிய

## அருளாசி உரை

அன்பும் அருளும் ஆசியும் கிடைப்பதாக.

தென்மராட்சி தெய்வீக ஒளி வீசும் பெரும் பிரதேசம் என்றால் அது மிகையாகாது.
மீசாலைகிழக்கு பாலையடிப்பிள்ளையர் இன்றையநெருக்கடியான நேரத்தில் மக்களுக்கு தேவையானது இறைவழிபாடு ஒன்று தான் என்பதை நன்குணர்ந்துள்ளமை விக்கினந்தீர்ப்பவன் திருவருளாகும்.

மக்களுக்கு ஆன்மீக சேவை செய்ய சைவாலயங்கள் தமது வளங்களின் ஒருபகுதியை செலவு செய்ய வேண்டும். சேவைகள் பல இன்று மக்களுக்கு தேவையாக உள்ளது. அறிவுப்பசி, வயிற்றுப்பசி, வாழ்வாதாரவளர்ச்சிப்பசி எனப்பல தேவைகள் மக்களுக்கு அவசிய தேவையாக உள்ளது.

மக்கள் சேவை மகேசன் சேவை. மக்கள் மனிதம் உடையவர்களாக வளர வேண்டும். அதற்கு அறிவு அவசியம். அறிவு இறையியலுடன் தொடர்பாக வளரவேண்டும். அப்போது தான் மனிதம் மனிதவிழுமியங்கள் பேணும் சமுதாயம் உருவாகும். அதற்கு இன்று ஆலயங்கள் அறிவு வழங்கும் இறை இல்லங்களாக மாறவேண்டும். பூசை , அர்ச்சனை இவைகள் எதற்கு என மக்கள்

உணரச் செய்யவேண்டும். இதனை உணர்ந்து இச்சேவை செய்யமுன்வந்த பாலையடிப்பிள்ளையார் ஆலய நிர்வாகம், ஆலயசமூகம் சார்ந்தவர்கள் போற்றப்படவேண்டியவர்கள். அவர்கள் நல்ல சிந்தனை உடையவர்கள் என்பதனை இக்கைங்கரியம் எடுத்துக்காட்டுகிறது.

இந் நூலாசிரியர் பிள்ளையாரால் ஆட்கொள்ளப்பட்டவர் என்பது எனது எண்ணம். அவர் கல்விகற்கும் காலம் தொடக்கம் என்னுடன் ஈடுபாடு கொண்டவர். தென்மராட்சியில் சைவசமயவளர்ச்சியிலும், மக்கள் ஆன்மீக வழி வாழ வழிகாட்டபலமுயற்சிகள் எடுத்து வருகின்றார். தென்மராட்சி மக்களும் அவருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்கள்.மேலும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சைவத்தையும் தமிழையும் ஆறுமுகநாவலர் வளர்த்த தன்மையும், அவர் சமுகத்துக்காக கஞ்சித்தொட்டிதர்மம் (மானசீகமான சேவையும் )' காலத்தின் தேவையை உணர்ந்து செய்தார்

இறைவன் இருக்கின்றான். அவன் நமது செயல்களை கவனித்துவருகின்றான். எனமக்கள் நம்பிக்கையுடன் வாழ்கின்றனர்.மனிதர்களின் தவறுகளை கண்டிக்கும் தலைவனாக அவன் நீக்கமற நிறைந்து இருக்கின்றான். ஆறறிவு படைத்த மனிதன் மனதைஅடக்கி அமைதியுடன் வாழ, விரதங்கள், பிரார்த்தனைகள் அவசியம். மகான்களின் வாழ்கை வழிமுறைகளையும்; உபதேசங்களையும் கடைப்பிடித்து இறைவழிபாடாற்ற வேண்டும். இறைவன் நாமங்களை மனதில் நிலைநிறுத்தி துதி செய்து வாழவேண்டும். நூலாசிரியர் உள்ளக்கிடக்கை இவ்வாறன வழிகாட்டல் நூல்கள் சிறுவர் முதல் பெரியோர் வரை அவசியம் என்பதாகும். காலத்தின் தேவைக்கு ஏற்ப சைவப்புலவரும் ஆசிரியருமான திரு குமாரசாமி சுமுகலிங்கம் அவர்களின் இப்பணி தொடர பாலையடி தான் தோன்றி விநாயகன் உடனிருக்கவேண்டும் எனப்பிரார்த்தித்து குருபாதம் பணிந்து அனைவருக்கும் நல்லாசிகள் என்றும் கிடைக்க பிரார்த்திக்கிறேன்

அன்பும் அருளும் அவன் செயலே
அதை அடைந்தால் என்றும் பேரின்பமே

தவத்திரு
தில்லைநடேசானந்த பழனி ஆண்டவர் சுவாமிகள்

# என்னுரை

என் எண்ணங்களுக்கெல்லாம் காரணமாக அமைந்து என்னை வழிநடத்திக் கொண்டிருப்பவர்கள் எங்கள் குல தெய்வங்கள், வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகன் பூர்ணர்,புஸ்க்கலா சமேத அரிகரபுத்திரன், வள்ளி தெய்வானை, சமேத சிவசுப்பிரமணியர், முனியப்பர், வீரபத்திரர் சுவாமிகள் திருப்பாதம் பணிந்து போற்றி வணங்குகின்றேன்.

என்னைப் பெற்றெடுத்த நாள் தொடங்கி இன்றுவரை வழிப்படுத்தி வரும் முன்னறிந்த தெய்வங்களாம் அன்னை, பிதா, குரு கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் பாதம் பணிந்து போற்றுகின்றேன்.

மீசாலை கீழக்கு பாலையடியில் தான்தோன்றியாக காட்சி கொடுத்து அருளாட்சிபுரியும் அப்பன் ஆனைமுகன் அருளால் வெளிவரும் கபிலானந்தம் இன்றைய காலத்து இயையூறுகள் களைய, விநாயகப் பெருமான் அருமை பெருமைகளை வெளிக்கொண்டு வரும் நூலாகும். வரதபண்டிதர் இயற்றிய பிள்ளையார் கதைப்பொருள் திரும்பத்திரும்ப கற்று உணரவேண்டும். பிள்ளையார் கதை நோன்புக்காலம் மட்டும் அல்ல தினந்தோறும் பாராயணம் பண்ணுவதால் இடர்கள் களையும் என்பதனை கற்றறிந்தோர் உணரமுடியும். எல்லோரும் இயன்றவரை பாராயணம் பண்ணி இடர்களில் இருந்து விடிவுபெறுவோமாக.

இற்றைய தேவை அறிந்து ஆலய போசகர் அம்மா திருமதி லட்சுமி இராசரத்தினம் அவர்கள், ஆலயபரிபாலகர்கள் , ஆலயசமுகத்தினர்கள், இவ்வரிய கைங்கரியத்தை முன்னெடுத்தது பாலையடியான் திருவருளாகும். திருமதி கமலாதேவி குணசிங்கம் அவர்கள் மனதை பாலையடியான் குடிகொண்ட தன்மை எழுத்தில் எழுதமுடியாது.

இந்நூல் வெளிவர உதவியவர்கள் பொதிகை பதிப்பகத்தினர். தமது செலவுடனே எந்தவிதமான இலாபநோக்கமும் இன்றி இறைபணிக்காக தெய்வீக நூல்கள் தொகுப்புகளுக்கு பேருதவி புரிகின்றனர்.

வாழ்த்துரை வனங்கிய இந்துசமயகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி மகீந்தினி சீவகாருணியம் , ஆசியுரை வழங்கிய சுவாமி தில்லைநடேசானந்த பழனிஆண்டவர் சுவாமிகள் குமரக்கோட்டம் முத்துமாரியம்மன் ஆலயத்தில் இறை இன்பம் அநுபவித்து வரும் அவர்கட்கும். ஒப்புநோக்குதல் செய்துதவிய திருமதி சிவமங்கை சிவராசா (ஆசிரியை யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்) அவர்கட்கும், அர்பணிப்பான சேவைக்கு ஒத்துழைக்கும் அனைத்து தென்மராட்சி மக்கள் அனைவருக்கும் விநாயகன் அருள்பாலிக்க வேண்டுகிறேன்.

**'ஓதலுடைமை வேதவித்தை"**

என்றும் இறைபணி ஆற்ற அருள் வேண்டி குருபாதம் பணிந்த அமைகின்றேன்

சைவப்புலவர்
திரு. குமாரசாமி சுமுகலிங்கம் J.P
சைவசித்தாந்த பண்டிதர்.
அறநெறிக்குரு.
இந்துதர்மாசிரியர்
யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.
சாவகச்சேரி.

இந்துசமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்
மாவட்ட அலுவலகம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்
22.11.2007.

# வாழ்த்துரை

யாழ் மாவட்டத்தில் இயற்கை எழிலுடன் சகல வளங்களும் நிறையப்பெற்றது தென்மராட்சிப்பிரதேசம். சைவஆலயங்கள் இப்பிரதேசத.தில் நிறைவாகவே காணப்படுன்றது. அத்துடன் சைவப்பாரம்பரியத்தில் ஊறித்திளைத்தவர்கள் இப்பிரதேசமக்கள் என்றால் மிகையாகாது.

மீசாலை கிழக்குப் பதியிலே இருந்து அருளாட்சி புரிந்துகொண்டிருக்கும் பாலையடிப்பிள்ளையார் அடியவர் குறைதீர்க்கும் அற்புதப் பெருமான். இவ்வாலயத்தில் பிள்ளையார் பெருங்கதையை முன்னிட்டு நூல் வெளியீடொன்று செய்வதையிட்டு மனமகிழ்வடைகின்றோம். எத்தனை தடைகள் வந்தாலும் கொண்ட கொள்கையில் உறுதிபூண்டவர்கள் நம்சைவப்பெருமக்கள் என்பதை உணர்த்தும் வகையில் சிறந்த கைங்கரியங்களை காலத்தின் தேவையுணர்ந்து நிறைவேற்றுவது சாலச்சிறந்ததே. ஆன்மீகப் பணியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுழைக்கும் ஆலயங்கள் வரிசையில் இப் பாலையடிப் பிள்ளையாரும் ஒன்றாகும். ஆலய நிர்வாகத்தினரின் அரும் பெரும் பணியை மெச்சுகிறோம்.

"கபிலானந்தம்" எனும் அழகிய திருப்பெயரில் இன்நூலை தொகுத்தளிக்கும் ஆசிரியருந் சைவப்புலவருமான திரு. குமாரசாமி சுமுகலிங்கம் அவரின் பணியை மனதார வாழ்த்துகின்றோம். காலத்தின் தேவையறிந்து இவர் குறுகிய காலப்பகுதியில் சைவவாழ்வியலும் இடர்களைபதிகமும், கணேசகலசம், அத்திமுகன் அருள் அமிர்தம், புகாமுகப் புங்கவன் புகழ்நாதம் போன்ற பல்வேறுபட்ட நூல்களைத் தொகுத்தளித்து சைவஉலகிற்கு வழங்கியமையையிட்டு எமது திணைக்களம் சார்பில் பாராட்டுகின்றோம்.

ஆன்மிகத்தின்பால் ஈடுபாடு கொண்டு, ஆன்மீகப்பணிக்காக தன்னை அர்பணிக்கும் இவர் பணிகளை அறிந்திருக்கின்றோம். எமது இளைய தலைமுறை அறநெறியின்பால் ஒழுகி ஆன்மீகவாழ்வு வாழவேண்டும் என விரும்புபவர். நவீன உலகில் உறைந்துபோயிருக்கும் எம்மவர்களைத் தட்டி எழுப்பி எமது சைவசிந்தனைகளை விதைப்பதற்காக அரும்பாடுபடுபவர். இந்த வகையில் அறநெறிப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் தன்னாலான பங்களிப்பினை வழங்கும் ஒருவர். இவர் தொடர்ந்து நீண்டஆயுளுடன் பலநூல்களை வெளியீடு செய்ய வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணைநிற்பார் என்பதில் ஐயமில்லை.

கபிலானந்தத்தில் பாலையடிப்பிள்ளையார் ஆலயவரலாறு விநாயகர் ஆவதாரம், கணபதீச்சரப்பதிகம், பிள்ளையார்கதை, விநாயகர் அகவல், வருகைக் கோவை, மங்களம் போன்ற பல விடையங்கள் அடங்கியுள்ளன. அனைவருக்கும் சிறந்த ஆவணநூலாக அமையும் இவ் அரிய நூலை அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டும் என்பதுதான் எமது வேண்டுதல். இப்பணியில் அரும்பாடுபட்டுழைத்த சாவகச்சேரி இந்துபரிபாலன அறிவியல் மன்றச்செயலாளர் திருமதி .குணசிங்கம் கமலாதேவி, மற்றும் திருமதி இலட்சுமி இராசரத்தினம்(ஆலயபோசகரும் மனறத்தின நிர்வாக உறுப்பினர்) போன்றோர் பணிகளையும் பாராட்டி ஆனமிக வாழ்வு மிளிரட்டும் என வாழ்த்துகின்றோம். அனைவர் பணிகளும் தொடரட்டும்.

கபிலானந்தம் அனைவருக்கும் ஆனந்தம் தர
வாழ்த்தி அமைகின்றோம்

செல்வி. மகிந்தினி சீவகாருணியம்
இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்
( தென்மராட்சிப் பிரதேசம் )
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
மாவட்டச் செயலகம்,
யாழ்பாணம்.



## மீசாலை கிழக்கு பாலையடிப்பிள்ளையார் ஆலயவரலாறு

வசமயமே உண்மைச்சமயம் கந்தபுராண கலாசாரமே எமது உயிரினும் மேலானது. என்ற பண்பாட்டுடன் வாழ்ந்து வரும் சைவசமயச்சான்றோராக வாழ்பவர்கள் தென்மராட்சிமக்கள். இயற்கை வளங்கள் முக்கனிகள் தானியவகைகள் குறைவின்றி விளையும் நிலவளம் பொருந்தியது இறைவன் திருவருளாகும்.

மீசாலையில் நாலாபுறமம் தானாக அருட்காட்சி கொடுத்து வெளிவந்து அருளாட்சிபரியும் விநாயகர் ஆலயங்களில் மீசாலை கிழகக்கு பாலையடிப்பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும்.

தான்தோன்றியாக லிங்கவடிவமாக இருந்து அருளாட்சிபுரிகின்றார். இப்போதுள்ள சமுதாயத்தினர் அறிந்தவரையில் வரலாறு இங்குதரப்படுகின்றது, 1925 ம் ஆண்டளவவில் மீசாலை கிழக்கில் வசித்து வந்த வைத்தியர் சண்முகம் வினாசித்தம்பி என்பவருக்கு உரிய காணியை துப்பரவு செய்த போது பாலைமரம் ஒன்று பாரியவிருட்சமாக காட்சிகொடுத்தது. இதனையும் அகற்றும் நோக்குடன் தறித்தார்கள். தறித்தவர்கள் அதிர்ச்சி அடையும்படியாக இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. துப்பரவு செய்தவர்கள் அப்படியே அதனை நிறுத்திவிட்டு சென்றார்கள். .இந்த நிலையில் அன்று இரவு ஆறுமுகம் என்னும் அடியவரின் கனவிலே எம்பெருமான் தோன்றி அருட்காட்சிகொடுத்து அம்மரத்தடியில் லிங்கம் ஒன்று இருப்பதாகவும் அதனை எடுத்து அந்தமரத்தைத்தறிக்காது அவ்விடத்தேவைத்து பூசிக்கும் படியும் அருள்வாக்கு வழங்கினார்.

எம்பெருமான் அருட்காட்சியையும் அருள்வாக்கினையும் சிரமேற்கொண்டு சிறுகுடிசை அமைத்து அந்த லிங்கத்திற்கு பூசை செய்து வந்தார்.இவரது சிந்தனைக்கு அமய ஊர்மக்களின் உள்ளமும் இறைஅருள்காரணமாக அவர்வழியே அமைந்தது. வேண்டிய ஒத்துழைப்புடனும் ,பொருளாதாரவளங்களுடனும், மக்களும் வழிபாடுகள் ஆற்றி வந்தனர்.

திருப்பணிகள் நடைபெற்று 1950ம் ஆண்டு வைகாசி மாதம் கும்பாபிசேகம் சிறப்புற நடைபெற்றது. பூசைகள் பின்னர் அந்தணப் பெருமக்கள் சைவர்கள் பூசைகளை நிறைவுறச் செய்து வந்தனர்.

1982 ம் ஆண்டு ஆவணிமாதம் பரிபாலனசபை ஆரம்பித்து நிர்வகித்து வந்தனர். இதற்கு செல்லையா இராசரத்தினம் என்பவரே தலைமை தாங்கி நடாத்திவந்தார். 1988 ம் ஆண்டு அவர்மறைவுக்கு பின் அவரது தம்பியார் செல்லையா கணபதிப்பிள்ளை தலைவராக இருந்து வந்தார்.


தற்போது கோயில் காணி உரிமையாளரான சண்முகம் வினாசித்தம்பி தலைவராக இருந்து ஆலய பூசைகள் மற்றும் திருப்பணிகளை செவ்வனெ இறையருளுடன் இறைபணி ஆற்றிவருகின்றார். இச்சபையில் போசகராக திருமதி இலடசுமி இராசரத்தினம் இருந்து வருகின்றார்.

## ஆலயவிசேட வழிபாடுகள்

மாதாந்தசதுர்த்தி, ஆவணிச்சதுர்த்தி,திருவாசகமுற்றோதல், வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுபிராத்தனை ,பண்ணிசை நடைபெறுகின்றன. நித்திய,நைமித்திய காமிய, நிஷ்காமிய கிரிகைகள் வழிபாடுகள் அந்தணப்பெருமக்களால் காலத்துக்கு ஏற்ப பொருத்தமானவர்கள் செய்துவருகின்றார்கள்.
வேண்டுதல்

## வேண்டுதல்

இவ்வாலயதிருப்பணிவேலைகள் செய்ய வேண்டிஉள்ளது இன்றையகாலம் இதற்கு இடையூறக உள்ளது. ஆனால் மக்கள் வழிபாடு ஒன்று தான் இடர்களைக் களையும். வேறுமார்க்கம் இல்லை. எனவே அனைத்து சைவமக்களும் ஆலயவழிபாடுகள் தியானங்கள் தனியாகவும், கூட்டாகவும் , பிராத்தனையில் ஈடுபாடு கொண்டு அன்பு வழி நின்று பெருவாழ்வு வாழ வேண்கின்றோம்.



# விநாயகர் திருப்பள்ளி எழுச்சி



**ராகம்:- பூபாளம் தாளம்:- ஆதி**


திருநிறைச்செல்வா செழுங்குயில்பாடித்
திகழ்வன வானிடை எங்கும்
உருநிறை காகம் ஒண்சிறை யடித்திங்
கொலிதரக் கரைந்தக மகிழும்
கருநிறக் கங்குல் விடிந்தது பகலோன்
கரங்களும் தடவின உலகில்
பருணிதா் போற்றும் ஐங்கரச் செல்வா
பள்ளியெழுந்தருளாயே

இன்னமுந்துயில்வாய் ஈதென்ன உறக்கம்
எழுந்தருள் எழுந்தருள் ஐயா
கன்னலும் தேனும் கட்டியும் பாலும்
கடலையும் அப்பமும் கொணர்ந்தோம்
நென்னலே இரவில் வந்து காத்திருந்தோம்
நெடும் புளைக்கைக் கஜமுகனே
பன்னரும் புகழ்சோ் பரம்பொருட்செல்வா
பள்ளியெழுந்தருளாயே

1) நினைத்தனவெல்லாம் நிறைவேற வேண்டுமெனில்
வினைத்தழையெல்லாம் வேரற வேண்டுமெனில்
திணைத்தினை அளவேனும் தேவன் கணபதியை
நினைத்திடலே போதும் நிச்சயம் கைகூடும்

2) அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கைவேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
கற்பகமூர்த்தி தெய்வக்
களஞ்சியத்திருக்கை சென்று
பொற்பதம் பணிந்து பாரீர்
பொய்யிலைக் கண்ட உண்மை.

# கணபதீச்சரம்





## திருமருகல்

காவிரித் தென்கரைத்தலம் அத்தலத்தில் திருமணம் நடைபெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு பெண் தன் தலைவனாக வரவேண்டியவனுடன் வந்தாள் அப்போது அரவம் தீண்டி அந்த ஆண் மகன் இறந்தான் பெண் மணியின் அறாத்துயரை துடைக்க இறைவன்திருவுளம் கொண்டார்.அப்போது அங்கிருந்த திருஞான சம்பந்தப்பெருமான் அரவம் தீண்டி இறந்தவனை உயிர்பெற்று எழச்செய்து அற்புதம் நிகழ்த்தினார்.

சுவாமி - மாணிக்கவண்ணர்
அம்பிகை - வண்டுவார்குழலி
தலவிருட்சம் - கல்வாழை
தீர்த்தம் - மாணிக்கதீர்த்தம் ,இலட்சுமி தீர்த்தம்.

## திருச்செங்காட்டங்குடி

சோழநாட்டு காவித்தென்கரைத்தலம். இறைவன் சிறுத்தொண்டநாயனாரிடம் பிள்ளைக்கறி கேட்டு அன்பு நெறியைஅனைவருக்கும் உலகறியச்செய்ய அருள்புரிந்த திருத்தலம் விக்கனம் தீர்க்கும் விநாயகப் பெருமான் இத்தலத்தில் பூசித்ததால் கணபதீச்சரம் என்னும் பெயரைப் பெற்றது.

சிறுத்தொண்டநாயனார் விநாயகரை பிரதிஸ்ட்டை செய்து வழிபாடு செய்த சிறப்பு மிக்கதிருத்தலமாகும்.

சுவாமி பெயர்:- உத்திராபதீச்சரத்தார், கணபதீச்சரத்தார்.
அம்பிகை :- குழலம்மை
தலவிருட்சம் :- ஆத்தி
தீர்த்தம் :- சூரியதீர்த்தம், இந்திர தீர்த்தம்.

# கணபதீச்சரப் பதிகம்

திருஞானசம்பந்தர் திருமருகலில் தங்கி இருந்த காலத்தில் திருச்செங்காட்டங்குடியில் வசிக்கும் சிறுத்தொண்டநாயனார் தமது பதிக்குவருமாறு வேண்டுகோள்விடுத்தார்.அப்போது திருஞானசம்பந்தர் திருமருகலில் திருக்கோயினுள் சென்று தரிசிக்க அப்பெருமான் திருச்செங்காட்டங்குடி கணபதீச்சரத்தில் உள்ளவாறு காட்சி கொடுத்தருளினார். அத்தருணம் மகிழ்ச்சி மேலிட இத்திருப்பதிகம் வினாவுரையாக திருவாய்மலர்ந்து அருளினார்.
திகவினை அகன்று நல்வினை பெருகி தீர்க்கசுமங்கலியாக வாழவழிகாட்டும் பதிகம். நாம் திருஞானசம்பந்தர் அற்புதத்தில் இருந்து உணர்வோமாக.

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கயல் ஆர்புனல் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்குளரி ஏந்திஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 1

நெய்தவழ் மூவெரி காவல்ஓம்பு
நேர்புரி நூல்மறை யாளர்ஏத்த
மைதவழ் மாடம் மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செய்தவ நான்மறை யோர்கள் ஏத்தும்
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கைதவழ் கூர்எரி ஏந்தி ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 2

தோலொடு நூலிழை சேர்ந்த மார்பர்
தொகுமறை யோர்கள் வளர்த்த செந்தீ
மால்புகை போய்விம்மு மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேல்புல்கு தண்வயல் சோலை சூழ்ந்த

சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கால்புல்கு பைங்கழல் ஆர்க்கஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 3

நாமரு கேள்வியர் வேள்விஓவா
நான்மறை யோர்வழி பாடுசெய்ய
மாமரு வும்மணிக் கோயில்மேய
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
தேமரு பூம்பொழில் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காமரு சீர்மகிழ்ந்து எல்லி ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 4

பாடல் முழவும் விழவும் ஓவாப்
பன்மறை யோரவர் தாம்பரவ
மாட நெடுங்கொடி விண்தடவு
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காடக மேஇடமாக ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 5

புனை அழல் ஓம்புகை அந்தணாளர்
பொன்னடி நாள்தொறும் போற்றிஇசைப்ப
மனைகெழு மாடம் மலிந்த வீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சினை கெழு தண்வயல் சோலைசூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கனைவளர் கூர்எரி ஏந்தி ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 6

கபிலானந்தம்

புண்தங்கு மார்பின் இலங்கைவேந்தன்
பொன்நெடும் தோள்வரை யால் அடர்த்து
மாண்தங்கு நூல்மறை யோர்பரவ
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேண்தங்கு மாமலர்ச் சோலை சூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காண்தங்கு தோள்பெயர்த்து எல்லிஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 7

அந்தமும் ஆதியும் நான்முகனும்
அரவணை யானும் அறிவரிய
மந்திர வேதங்கள் ஓதுநாவர்
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செந்தழி லோர்கள் பரவிஏத்தும்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கந்தம்அ கில்புகை யேகமழும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 8

இலைமரு தேஅழ காகநாளும்
இடுதுவர்க் காயொடு சுக்குத்தின்னும்
நிலை அமண் தேரரை நிங்கிநின்று
நீதர் அல் லார்தொழு மாமருகல்
மலைமகள் தோள்புணர் வாய்ஆருளாய்
மாசில்செங் காட்டங் குடியதனுள்
கலைமல்கு தோல் உடுத்து எல்லிஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 9

நாலும் குலைக்கமுகு ஓங்குகாழி
ஞானசம் பந்த னலந்திகழும்
மாலின் மதிதவழ் மாடம் ஓங்கு
மருகலில் மற்று அதன் மேல்மொழிந்த
சேலும் கயலும் திளைத்த கண்ணார்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
சூலம்வல் லான்கழல் ஏத்துபாடல்
சொல்லவல் லார்வினை இல்லையாமே. 10

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்



# விநாயகப் பெருமான்



சிவபெருமானுடைய மூத்தகுமாரர் விநாயகர் சிவனும் விநாயகரும் ஒருவரே. தேவர்களின் துன்பந்துடைக்க விநாயகர் பிரணவத்தினின்றும் தோற்றினார் என்பது வரலாறு.

என்ற பின்(பு) அரன்மாதி னோடும்
இலங்க சோலையுள் மேவனே
குன்று றாத பெரும் புகழ் பெறு
குடிலை தான்இரு தந்தியாய்
அன்று நற்கல வித்தொ ழில்செய்
ஐங் கரத்தன் உதித்து நீள்
வன்றி றல்பர னோடு மாதை
வணங்க மார்பில் அணைத்தனர்.

- கந்தபுராணச் சுருக்கம் -

கயமுகசுரனின் துன்பத்தால் வருந்திய விஷ்ணு முதலான தேவர்கள் திருக்கைலாச மலைக்குப் போய் சிவபெருமானை வணங்கித் தங்கள் துன்பத்தை நீக்கியருளும்படி வேண்டினர். சிவபெருமான் தேவர்களுக்கு அருள் செய்ய விரும்பிப் பார்வதி தேவியாருடன் திருக்கைலாச மலையிலுள்ள நச்தவனத்திற்கு போய் அங்குள்ள சித்திர மண்டபத்தில் எழுந்தருளி அங்குள்ள சித்திரங்களை நோக்கினர். சித்திரங்களில் ஒன்றாயிருந்த சிவசக்தி பிரணவம் சிவபெருமானது திருவருளினாலே ஆண்டவன் எழுத்தாகிய அகரம் ஆண்யானையாகவும். அம்மை எழுத்தாகிய உகரம் பெண்யானையாகவும் காட்சியளிக்க அதனிடமாய் யானைமுகத்தோடு கூடிய விநாயகப் பெருமான் திருஅவதாரஞ் செய்தார்.

விநாயகப் பெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு விநாயகர் வக்கிரதுண்டா, சிந்தாமணி விநாயகர், கஜானனர், விக்கினராசர், மயூரேசர், பாலச்சந்திரர், தூமகேது விநாயகர், கணபதி மகோற்கடர்,துண்டி விநாயகர், வல்லபைகணேசர், என்னும் பன்னிரண்டு திருஅவதாரங்களைக் கொண்டருளினார்.

## திருவுருவம்

திருவருளே திருமேனியாக உள்ளவர் விநாயகப் பெருமான். ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு யானைமுகமும், பூதவயிறும், தேவசரீரமும், ஒற்றைக் கொம்பும், மூன்று திருக்கண்களும், இருசெவிகளும், அங்குசமும், ஒடித்தகொம்பு, செபமாலை, பாசம், மோதகம் தாங்கும் ஐந்து திருக்கரங்களும், இரண்டு திருவடிகளும் முடையவராய் மூஷிக வாகனத்தைக் கொண்டருளுவர்.

சர்வவல்லபரான சிவபெருமானிடம் இருந்து முதன் முதலில் எழுந்த ஒலி ஓம் என்பதே. இந்த ஓம் என்னும் ஒலியின் வரி வடிவம் விநாயகரின் திருவுருவமாகும். வேதம் பிரணவத்தை முதலாகக் கொண்டுள்ளது. பிரணவம், நாதம், விந்து,அகரம் உகரம், மகரம், ஆகிய ஐந்துறுப்புக்களையும் தன்னகத்து அடக்கியுள்ளது. நாதம் தாண்ட வடிவம் ,விந்து வட்டவடிவம், இவ்விரு உறுப்புக்களும் சேர்ந்த வடிவம் **பிள்ளையார் சுழி** என்று சொல்லப்படும். உ என்னும் எழுத்து நாத விந்துகளின் வரிவடிவமாகும். எனைய எழுத்துக்கள் கசானனருடைய முகத்திலடங்கும். விநாயகத் திருவுருவங்கள் முப்பத்திரண்டுவகை என நூல்கள் கூறும்.

## வழிபாடு

எதையும் எழுதத் தொடங்குமுன் பிள்ளையார் சுழிஇட்டு எழுதும் வழக்கமும் எக்கருமத்தையுஞ் செய்யத் தொடங்குமுன் பிள்ளையார் வழிபாடு செய்து தொடங்கும் பழக்கமும் தொன்று தொட்டுள்ளது. கணபதி பூசை கைமேற்பலன் என்பது ஆன்றோர் வாக்கு.

உ
கணபதி துணை



## வரதபண்டிதர் இயற்றிய பிள்ளையார் கதை
## காப்பு

கரும்பும் மிளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவும் மேன்மேல் அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனி லேறி
வருமரன்றா னீன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங்கைகூடுஞ் செஞ் சொற்
பெருவாககும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை

ஒற்றை மருப்புமு ஒரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

## சப்பாணி

எள்ளுப் பொரித்தேன் அவல் அப்ப மிக்கும் பயறு மிளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்
வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப் படைத்தேன்சந்நிதியில்.
கொள்ளைக் கருணைக் கணபதியே கொடடியருள்க சப்பாணி

சண்டப்பெருச்சா ளியேறிச் சடைகொண்டுவையத்துலாவி.
அண்டத் தமரர் துதிக்க வடியார்க்கருளும் பிரானே
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இனையுற்ற பேரோளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணிகொட்டே.

## சரஸ்வதி துதி



புத்தகத் துள்ளுறை மாதே
பூவி லமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய்
வேதப் பொருளுக் கிறைவீ
முத்தின் குடையுடை யாளே
மூவுல குந்தொழு தேத்துஞ்
செப்புக் கவித்த முலையாய்
செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய்
சரஸ்வதி யெனுந்திருவே
எக்கால முமுனைத் தொழுவே
னியலிசை நாடக மென்னும்
முத்தமிழ் கல்விக ளெல்லா
முழுது மெனக்கருள் செய்தென்
சித்தந் தனில்நீ யிருந்து
திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் பனற்செறி குடுமித்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிபறத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

### கதை

மந்தர கிரியில் வடபா லாங்கோர்
இந்துதவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பர சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளில்
மற்றவர் புரியு மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க் குயிரே
அரனே மறையவர்க் கருள்புரிந் தருளென
அந்தஅந் தணனுக் கிந்தநபிறப்பிற்ல
மைந்தரில் லையென்று மறுத்தர னுரைப்ப
எப்பரி சாயினும் மெம்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் றனக்கருள் செய்கென
எமையா ளுடைய யுமையாள் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய

மாதுமை யவளும் மனந்தளர் வுற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப் பெய்துதல்
நன்றல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்
கறைமிற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவற்குநீ பிள்ளை யாகச்
சென்றவண் வளர்ந்து சிலபகற் கழிந்தால்
மன்றல்செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத் தருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபி னன்னையு மத்தனும்
மையார் கருஞ்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்ப
பிறப்பிறப் பில்லாப் பெரியோர்க் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென
மற்றவன் றன்னையுன் மணமக னாகப்
பெற்றிட லரிதெனப் பெயர்தவர் பேச
அருந்தவ முயற்சியா லணுகுவே ன்யானெனக்
கருந்தட நெடுங்கட் கவுரியங் குரைப்ப
மருமலி கமல மலர்த்தடத் தருகிற்
றருமலி நிழற்றவச் சாலைய தமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் புரிதலும்
அரிவைத னருந்தவ மறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மானிட மேந்தும் வண்ணம் தொழிந்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு

மடமயி றவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்ணறுங் கூந்தற் தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிஙகியற்றுவ தென்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடவென் றுரைத்தலும்
நன்றெனச் சிரித்து நானமறையோனும்
மாடடினில் ஏறி மான்மழுத் தரித்து
காட்டினிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பு மெலும்பும் ப..றலை மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பித்தன் றன்னை
நச்சிநீ செய்தவ நகைதரு முமக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவ ணாணமுற்று றணிமனை புகுதலும்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதா யிருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றின னென்றலுந்
தோடலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடக் தனிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கைய ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைமலர்க் குழலி வந்தெனை யழைக்கில்
அம்மனை புகுவனென் றந்தண னுரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை யிகழ்ந்த சிற்றி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்றலும்
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி

மற்றைய மாதர் மதிமுக னோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு கல்லவென்
பொற்பமர் கொங்கை பொருந்துதற் கரிதால்
மானிட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத லிளையோர்க் கியல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சிறுத லொழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவமென் றஞ்சி
ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்ப னாகும்
வேதியன் பழைய விருத்தனென் றெண்ணி
ஆசன நல்கி யருக்கி முதலாய்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னாப்
போனகம படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை அமுதுசெய் வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தோடு சாதிக் காயும்
கர்ப்பூ ரத்தொடு கவின்பெறக் கொண்டு
ளெ்ளிலை யடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் முன்வைத்து
சிவனெப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணய்கத்
தேனமர் குழலி திருமுக நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியி னயனமு நீல கண்டமும்

மானு மழுவு மலர்க்கரத் திலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுருவங் காட்டிமு னிற்ப
மரகத மேனி மலைமகடாறும்
விரைவோடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே
அரிய யனிந்திர னமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுணரி ராக்கதர்
பூத ரியஙக்கர்கிம் புருட ரலகை
சித்தர்தா ரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்திலுள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந் ததற்பின்
மன்றலங் குழலிக்கு வதுவைநாட் குறித்துக்
தென்றல்வந் திலங்கு முன்றி லகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் றகட்டா லழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திகள் தோறும் பலமணி பதித்துக்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரண பொற்குடம் பொலிவுற வைத்துப்
திக்குத் தோறுந் திருவிளக் கேற்றிப்
பத்திப் படாமுனைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகும் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமக தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பி ரானையு மிளங்கொடி தன்னையும்
உம்ப ரெல்லா மொருங்குடன் கூடித்

கடலென விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந் தேத்த மகிழ்ந்துட னிருத்திப்
பறையொலி யோடு பனிவளை யார்ப்ப
வதுவைக் கேற்ற மறைவிதி நெறியே
சதுர்முக னோமச் சடங்குக ளியற்றத்
தறுகலற் றொளிபொற் றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருகுழற் பூவைதன் னுடனே
ஓதநீர் வேலைசூ உஞ்சயம் பதிபுக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீயென
வருங்கருங் குழலாள் மற்றுமுண் டோவெனத்
திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்க
களிறும் பிடியும் கலந்து விளையாடல்கண்டு
ஒளிர்மணி பூண்ணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோ மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுதரித்தோன் மதகரி யாக
மதர்விழி யுமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க வானினம் பெருகச்
செந்தழல் வேள்விவே தாகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல வரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோடு
ஐங்கர தலமு மலர்ப்பத மிரண்டும்
பவளத் தொளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டுங்

கோடிசூ ரியர்போற் குலவிடும் மேனியும்
பேழைபோ லகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியி னயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்திட னோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க
ஆங்கவர் தங்கட் கருள்சுரந் தருளித்து
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரணமாக பலகனி யருந்தி
ஏரணி யாலின்கீ ழினிதிரு வென்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்தினி திருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கானமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் முயிரழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத் தடற்படை சூழக்
கைமுகம் படைத்த கஜமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண் டேங்கி
அடுந்தொழிற் சூலிசத் தண்ணுலுமமருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்

அஞ்சலீ ரென்றவர்க் கபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனை மாமுகத் தவுணனோ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்த்த குறட்படை கூட்டி
வென்றுவாவென்று விடைகொடுத் தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்
பாங்குறு மவன்படை பற்றக் கொன்றபின்
தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை யொடித்தவ னுரத்திற்
குற்றிட வெறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென வெழுந்து
வாய்ந்மூ டிகமாய் வந்தவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறின னிப்பால்
எறிந்தவெண் மருப்பங் கிமைநொடி யளவிற்
செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத் தருளும்
வல்லவை தனைத்தன் மனையென மணந்தே
ஓகையோ டெழுந்தாங் குயர்புடை சூழ
வாகையும் புனைந்து வரும் வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்முக கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனையர்ச் சித்துக்
கணபதீச் சரமென்னுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந் தன்புட னெய்திய பின்னர்க்
கணங்களுக் கரசாய் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்திவ னேவல்செய் திடுநாள்

அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க் குரிய விரதமென் றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத் துறுமொரு சதுர்த்தியில்
நோற்றுநற் புசை நுடங்கா தாற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவரைங் கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன்குமர னிருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழு தடியிணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறைச் செவியுங்
கண்டன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபெரனை நோக்கி
என்னைக் கண்டிங் கிகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவ ருரைக்குமித் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவுமெய் துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளித் தினத்திற்
கோரவெஞ் சினமிக்க கொண்டன னந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டி நல் விரதமென்று
இதயத் தெண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்
வைப்புட னோற்ற வகையினிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனு மிளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி
எண்ணி ய விரத மிடையூ றின்றிப்

பண்ணிய பொழுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்ந்த செறுநரை வென்று
மலருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெவ்விர தத்ததை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டளி நுதையும் பசுந்தளாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளர்ந்து தலுற்றான்
அக்குநீ றணியு மரன்முத லளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் னொத்தொளி விளங்குங்
கோடிசூ ரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையிற் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையிற் மோதகமும் மொருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றிமை யவரும் யாவறிந் துதிப்ப
நன்றித ருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோகங்க ளுஞுற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தால்
தீங்குறா தெல்லாஞ் செயமுண்டாகும்
கரதல மைந்துடைக் கணபதிக் குரிய
விரதமொன் றுளததை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி திழைத்தடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியில் னினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தமையும் வென்றிட லாமெனத்

தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநிர் படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்
பத்தியோ டர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்குமவ ன்றன்
ஒள்ளிய வருட்டிரு வுருவுண் டாக்கிப்
பூசனைப் புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணா லமைத்தலுந் தகுமால்
பூசை செய் திடுமிடம் புனிதம தாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத் திருத்தி
விந்தைசேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி னினைந்து தியானம் பண்ணி
ஆவா கனமுத லர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்தமிர் தத்தா லபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திர னென்னுமந் திரத்தால்
மாசகலிரண்டு வந்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறு குடனிருபத்தொரு விதமாய்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிப னுயர்கரி முகத்தோன்

குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வ காரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னுநா மங்களால்
ஆரம் பத்துட னர்ச்சனை பண்ணி
மோதக மப்ப முதற்பணி காரந்
திதகல்ன் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால் தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவுமுன் வைத்து
உருத்திரப் பிரியவென் றுரைக்குமந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குப சாரமும்
மற்றவன் திருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி யிருபிறப் பாளர்க்கு
உண்ணறு சுவைசேர் ரோதன நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க் கீந்திட் டருச்சகன் றனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுரு வத்தைத்
தரிதவத் திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித் திகமென நவின்றரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரனிவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபடி எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் நாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னைடைந்தாள்

தண்ணார் மதிமுகத் தாள் தமயந்தி
அன்னா ளிவனை யர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனைய டைந்தாள்
ஐங்கரக் கடவுளை யர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகீரத னென்னும் பார்த்திவ னிவனை
மகிதலந் தன்னின் மலர்கொடர்ச் சித்து
வரநிதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளு மர்ச்சித் திவனை
அட்டபோ கத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி யென்னு மொண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கோண்டுபோ மளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடச் சித்துத்
தாரியின் மறித்தவன் தன்னைப் புறங் கண்டு
யாமுமங் கவளை யின்புறப் பெற்றோம்
புகர்முகப் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னி லெண்ணுதற் கரிதால்
அப்படி நீவிரும் அவனை அர்ச்சித்தால்
எப்பொருள் விரும்பினீ ரப்பொருள் பெறுவீர்
என்றுகன் றெறிந்தோ னெடுத்திவை யுரைப்ப
அன்றுமுதற் றருமனும் பனுசரு மிவனைப்
பூசனை புரிந்து கட புலனிலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையில் நினைந்தவை செகதினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத் தரசியில் பெற்றார்
ஈங்கிது நிற்க இவ்விரத த்தியல்
ஓங்கிய காதைமற் றொன்றுரை செய்வாம்
கஞ்சநான் முகன்றருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்

சூரனென் றோருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரத் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனு அமரரு முனிவரும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை யிறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீரென
அமரர் கோனுக் அரன்விடை கொடுத்துச்
சமர வேல்வழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தூடலும்
ஓடிய வானோ ரொங்குடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுட அழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்
ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்
காமனை எரித்த கடவுள் எனறு அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக் கேதென
உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றேன்
வானவர் அமாழிய மற்றவன் தானுந்
தானுமச் சபையிற் தரியா தேகி
எமையா ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளி மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை யவன்கையில் ஈதலும்

வறியவன் பெற்ற வன்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்கஒன் எணாமற்
பெருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை யாறுங்
கண்ணா றிரண்டுங் கரமீ ராறுந்
தூணெனத் திரண்ட தோள் ஈராறும்
மாணயி லாதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கவதரித்திடலும்
மறுகிய வும்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பா லளித்திரென றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்
ஒங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனு முமையும் விடையுகத் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட
இருவரு மின்பா லெடுத்தெடுத் தணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல வாயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறு மவுணரை யொறுத்திடென் றனுப்ப
இருளைப் பருகு மிரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்

தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமாந்தினி திருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாத ரனைவரு மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்தது கண்டே
அண்ட ரெல்லா மடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டுநீ யம்பிகா பதியென
இமையவ ருரைப்ப விறையவன் றானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல் கொண் டெம்வினை கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மஙகை நீதான் வருந்துத லொழிகுதி
அங்கையாற் சூதெறிந் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றர வணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமா லூழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புட னாடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவா யிதழுமை யான்வென் றேனென
எம்பெரு மானும் யான்வென் றேனென
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மான்முக நோக்கிக்

காமனை யெரித்தோன் கட்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா ளென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய பொய்க்கரி யுடனங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங் குருத்து
நோக்கிநீ யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தினி லொன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடுபசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற் றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகினிறத் துருப்போய்த்
துளவணி மருமனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தி லாயிரம் யோசனை
நீண்டபைப் பாந்த நெட்டுடல் எடுத்துப்
வளர்மருப் பொன்றுடை வள்ளல்வீற்றிருக்குங்
கிளர்சினை யாலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடு மடியார் வல்லினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீ ழிருந்தான்
கமபமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக் கறிவிப் போமென
உம்ப ருலகத் தோரேழு கன்னியர்
தம்பநூ லேணியிற் றாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் னாளில்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கி
இருபத் தோரிழை யின்புறக்கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியும் பூமியில் எழுத்தும்

ஆதிவி நாயகற் கானவெ ழுத்தும்
மூன்றெழுத் ததனான் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபா டாற்றி
இருபது நாளு மிப்படி நோற்று
மற்றநா ளைங்கர மாமுகன் பிறந்த
தற்றைநாட் சதயமு மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெளிபுன லாடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவிதா னித்து
மலர்பல தொடுத்திடு மாலைக ளாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழிரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தளைக் கூவிள முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் மவலெள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்

கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கணடு நோலா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொடிவி விரதம் பரிந்துநொற் பித்தார்
அண்டாநா யகன்னா மைங்கர னருளால்
விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகந் துமையோடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பாதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சின மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாப நீங்கிய தேனென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையன் றெனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றாழ் நீங்கச்
சாங்குமுன் னுரைத்த சக்கிர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புட நோற்றபின்
மாதுமை யடைந்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேனேர் மொழியா தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மக னோன்பி னுறுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமி லரனை யாயிழை வணங்கிப்

பெருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுளுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாதெனத்
தண்ணறுங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்குநீ றணியு மரன்முத லளித்த
விக்கின விநாயகன் விரதநோற் றதன்பின்
சுடர்க்கதை யேந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனு நோற்றுக்
கவுரியன் றடைத்த கபாடந் திறந்தம்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வர்ந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டெ
இந்நிலந் தன்னி லிவ்விரத தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் னோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்த்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையி லுற்றான்
பரிவொடிவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவர லொருத்தி
இற்றிடு மிடையா ளிலக்கண சுந்தரி
மெத்தவன் புடனிவ் விரதநோற் பேனென

அத்தந் தன்னி லணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சிலநா ணோற்றபின்
உற்ற நோன்பி னுறுதி மறந்து
கட்டிய விழையைக் காரிகை யவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை யிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்வியம் இல்லா ளவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோ டடைக்கா யவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் றன்னிடங்
கனவினில் வந்த காரண மாக
இக்கண சுந்தரியிம்மனை யிருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென வெழுந்து துணைவியை நோக்கி
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்வழி தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது திவளிங் கிருக்கலா காதென

அயந்கடை அவறும் அகற்றிய பின்னா்
வணிகன் தனது மனைபுகுந் திருப்ப
மணியு முத்தும் வலியகல்லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவா்தம் மனையி லுற்றவ ளிருப்ப
வளா்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னா்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனு மகற்றிய பின்னா்த்
தூசுதூய தாக்குந்தொழிலோா் மனைபுகத்
தூசுகளெல்லாந் துணிந்துவே றாகத்
தூசரு மவளைத் தூரஞ்செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாய் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யா ரென்ன
வெம்மன மிகவு மேவி முனிவுறா
அம்மனை யவனு மகற்றிய பின்னா்
அவ்வை தன்மனை அவள்புகுந் திருப்ப
அவ்வை செல்ல அகங்கடோறும்
வைதன ரெறிந்தனா் மறியத் தள்ளினா்
கைகொடு குற்றினா் கண்டோா் பழித்தனா்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீயாரென வினாவக்
காத்தாண டுலகு கருணையோ டாண்ட
மாா்த்தாண்ட ராசன் மாமக ளொருத்தி
எல்லாா்க்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூாியன் மனையெனச்
சீா்கெட விருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்

சாணியு முழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல்கண்டு
தானே சென்று சாணி யெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டின் மணிவிளக் கேற்றிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின் றாட
மெத்தவுண் ணடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கொதையை விலக்கி
அவ்வை தானே யகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை யுணர்ந்துமுன் னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்துமூ வேழிழைக் காப்பு கட்டி
அப்பமு மவலும் மாம்பழ பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற் றதற்பின்
சக்ர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோ மெனவுள மெலிந்தே
அவ்வை தன்மனை யங்கவ ரணுக
எய்துந் தாகமு மிளைப்புங் கண்டு
செவ்வே யவற்றைத் தீர்க்க வெண்ணி
இலக்கண சுந்தரியென்பவ டன்னை

அப்பமு நீரு மரசற் கருளெனச்
சேப்பிய வன்னை திருமொழிப் படியே
உண்ணீர்க் கரகமு மொருபணி காரமும்
பண்ணேர் மொழியாள் பார்த்திபற் குதவ
ஒப்பறு படையு முயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பினனர்
ஆனை குதிரை யவைகளு முண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வலங் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென் றரசர்க் குரைப்பாள்
கணபதி நொன்பின் காரணங் காணிது
குணமுடை யிவளுன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி யென்றவ்வை கூற
மற்கையை நோக்கி மனமக மகிழ்ந்து
திங்கணேர் வெள்ளிச் சிவிகையி லேற்றிக்
கொண்டூர் புகுந்ததான் கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரி லுயர்பத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## நூற்பயன்

1. பொன்மிகும் கல்விமிகும் புத்திரரோடெப்பொருளும்
மன்னு நவமணியும் வந்தணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக வுத்தமனார் நோன்பின்
றிருக்கதையைக் கேட்கச் சிறந்து.

2. பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தி னோன்பி கதைதன்னைச் - சொற்பெருக்கக்
கற்றவரு நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

3. வெள்ள யெருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலா தருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

4. சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தானோற்கில் - மேலைப்
பிறப்பெல்லா நல்ல பெருஞ்செல்வ மெய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து

பிள்ளையார்கதை முற்றுப்பெற்றது,
திருச்சிற்றம்பலம்





# போற்றித் திருவகவல்

அருள்புரிந் தருளு மரசே போற்றி
இருவினை துடைக்கு மிறைவா போற்றி
மறைமுனி யொருவன் மாங்கனி கொணர்ந்து
கறைமிடற் றிறைவன் கையில் கொடுப்ப
வேலனு நீயும் விரும்பிமுன் னிற்ப
ஒரு நொடி யதனி லுலகெலாம் வலமாய்
வருமவர் தமக்கு வழங்குவொம் யாமென
விரைவுடன் மயின்மிசை வேலோன் வருமுனர்
அரனை வலம்வந் தக்கனி வாங்கிய
விரகுள விக்கின விநாயக போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றி
பின்னடி தெரிதியாப் பெருங்கவிப்பெருமான்
மண்மிச வைத்துனை வாவியிற் செல்லக்
கண்ணிலா னிவனெனக் கரந்தவன் போகக்
கரமிசை யேறி காணா திரங்க
உரைதடு மாறி யுள்ளங் கலங்க
கூகூ கணபதி கூகூ வென்னக்
கூகூ வென்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் முப்புர மெரிக்க
இப்புவி யதனை யிரத மாக்கி
தினகரன் மதிதோச் சில்லி யாகப்
பொருவரு மறைகளே புரவி யாகப்
சங்கைசேர் நான்முகன் சாரதி யாகப்
பங்கயக் கண்ணன் பகழி யாக
மலை சிலை யாக வாசுகி நாணா
நிலைபெற நிற்கு நெடுந்தேர் தன்னில்
விக்கினந் தீர்க்கும் விநாயக நமவெனச்

சிக்கென விறைவன் செப்ப தேறலின்
தச்சறச் சமைத்த தகைமணி நெடுந்தேர்
அச்சறுத் தருளு மரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப் படையுடைப் புனிதா போற்றி
கரமைந் துடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி
அகில மீன்றரு ளம்மை தனக்குத்
திருமக னாகிய செல்வா போற்றி
அற்றவர்க் கருள்புரி யரசே போற்றி
கற்றவர் மனதிற் காண்பாய் போற்றி
பாசாங் குசங்கை பரித்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
எழுநர கெழுபிறப் பறுப்பாய் போற்றி
எழுமையு மெமக்கிங் கிரங்குவாய் போற்றி
துளைசெறி வக்கிர துண்டா போற்றி
வளநிக ரொற்றை மருப்பா போற்றி
வரமிகு மரிதிரு மருகா போற்றி
சுரர்தொழு முருகன் துணைவா போற்றி
நல்லவர் புகழு நம்பா போற்றி
வல்லபைக் குரிய மணாளா போற்றி
கயமுகத் தவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமிகு மூசிக வாகனா போற்றி
ஓங்கா ரத்தனி யுருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி
துறவர் தமக்கொரு தணைவா போற்றி
முறநிகர் தழைசெவி முதல்வா போற்றி
துண்டா மதிபொற் றுலங்கிய கோட்டைக்
கண்டக மாகக் கைதனிற் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும்பொன்
விண்டுவில் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி



# வருவைக் கோவை

அன்புடைக் கடவுளர்க் கதிபதி செயசெய
ஆபத் தகற்று மைங்கர செயசெய
இந்துச் சடைமுடி யிறைவா செயசெய
ஈசன் பெற்ற எம்மான் செயசெய
உன்னிய முடிக்கு மொருவா செயசெய
ஊர்மனை சந்தி யுகந்தாய் செயசெய
எம்பெரு மானே யேகனே செயசெய
ஏழுல குந்தொழ விருப்பாய் செயசெய
ஐயா கணங்கட் காதீ செயசெய
ஒற்றை மருப்பை யுடையாய் போற்றி
ஓங்கிய கரிமுக முற்றாய் செயசெய
ஔவிய மில்லா தவனே சேயசெய
அ்.கர வணிந்த வாதீ செயசெய
கண்முன் றுடையா களிறே செயசெய
ஙப்பொன் மழுவொன் றேந்தீ செயசெய
சங்கரன் றேரச் சறுத்தாய் செயசெய
ஞயமுடை வித்தக நம்பீ செயசெய
இ, டமுடை விக்கி னேசுரா செயசெய
இ, ணங்கிய வன்பர்க் கினியாய் செயசெய
தத்துவ முறைதரு சாமீ செயசெய
நன்னெறி வித்தக நம்பீ செயசெய
பகீரதிக் கினிய பாலா செயசெய
மன்று ளாடி மகனே செயசெய
இ,யக்கரைக் களைய மிறைவா செயசெய
அ, ரவக் கிங்கிணி யணிவாய் செயசெய
இ,லகக் கொம்பொன் றேந்தீ செயசெய
வஞ்சனைப் பழவினை மாற்றுவாய் செயசெய

அ, ழகிய வேலனுக் கண்ணா செயசெய
இ,ளமத யானை முகத்தாய் செயசெய
இ,றக்கரி சாடு மிறைவா செயசெய
அ,னந்த லாடு மரசே செயசெய
கரமைந் துடைய கணபதி செயசெய
காமன் பகைவன் காதல செயசெய
கிரியிற் பாரதந் தீட்டினாய் செயசெய
கீழ்மை யொழித்துக் கிளர்வாய் செயசெய
குண்டைப் பண்டிக் குருவே செயசெய
கூறிய மும்மதக் கோவே செயசெய
கெண்டையங் கண்ணுமை மகனே செயசெய
கேதா ரப்பரிய மானாண் செயசெய
கையிற் சக்கர முடையாய் செயசெய
கொவ்வைக் கனிவாய் மதலாய் செயசெய
கோலக் குடநிகர் வயிற்றாய் செயசெய
கௌவைப் பழவினை தீர்ப்பாய் செயசெய



## ஔவையார் அருளிச் செய்த விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன் னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சினில் குடிகொண்ட நில மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்

மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப்புரிநூல் திகழ் ஒளி மார்பும்
சொற்பாதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக்களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெ எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந்தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருள் என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவாட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனிற் கூடிய அசபை

விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தல் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயிறல் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற் கொன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள் வழி காட்டிச்
சத்தின்னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின்னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடு மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையைத் தநதெ எனை ஆண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே



உ

சிவமயம்

# மீசாலை கிழக்கு
# ஸ்ரீ பாலையடிப் பிள்ளையார் திருவூஞ்சல்

## துதிப்பாடல்

காமனது சூழ்ச்சினால் களிறு விளையாட உமை
நாமுமிதுபோல விளையாடுது மென்றதினால்
வாமன ரூபனாய் வந்த கண நாத நினை
பாமளவும் போற்றிடுவோம் நல்லவருளீநதருளே

## காப்பு

இலங்காபுரியினெழில் நகராம் யாழ்ப்பாண
வடபால் தன்னில்
நலங்கள் பலதான் நிறைந்த
நல்லூராம் மீசாலைக்கிராமந் தன்னில்
தலைசிறக்கும் பாலையடி விக்கின விநாயகர்க்
கோரூஞ்சல்பாட
குலஞ்சிறக்க வரமருளுங் குணபதியாங்
கணபதிதான் காப்பதாமே.

## நூல்

பரவெளியே யாடிவரு பந்தலாக
பதந்தொழுவார் மனங்களுயர் பீடமாக
பரஞான மூஞ்சலதன் கயிறதாக
பார் விளங்கு மாகமம் நற்றூண்களாக
கரமேவு மோதகமு மபயத்தோடு
கனிவகையு மப்பமொடு கடலையாதி
பொரி வகையு மிகவருந்தி மீசாலை மேவு
பாலையடி விநாயகரே யாடீரூஞ்சல் !

பாலச்ந்திரன் முத்துக்கவிகை தாங்க
பரிதிகுழாம் பேரொழியை அள்ளிவீச
காலனொரு தூதுவர்கள் துயில் மேற்கொள்ள
கவலையற்ற வுயிரினங்கள் வணங்கியேத்த
மாலயனு மகிழ்தோப்புக் கரணம் போட
மாமுனியா மகத்தியரும் மகிழ்ந்துபாட
பால்தயிரும் பலவளமும் நிறைமீசாலைப்
பாலையடி விநாயகரே யாடீரூஞ்சல்!

முல்லைமலர்ப் பல்லுமையாளமிர்த மூட்ட
முரல் வண்டர் தேனுண்ண உமையை மொய்க்க
தொல்லையென உமை மறுக்ச் சிவன் சிரிக்க
தோகை மயிலோன் வரவே வண்டர் நீங்க
தில்லை வனத்தையனுனக் காசி கூறி
செகத்திடர்கள் நீக்கியெமைக் காக்க வென்று
வல்லமை யாய் வளங்கொளிக்கு மீசாலையூரின்
பாலையடி விநாயகரே யாடீரூஞ:சல்!

அட்ட தேவதைகளுன் மேல் மலர்கள் தூவ
அட்டகுல பார்வதந்தனை யணையதாக
விட்டமுடையாலரசு பாலையின் கீழ்
வீசுதென்றல் தாலாட்ட விரும்பி வாழும்
கட்டை மலர்ப்பதமிரண்டுங் கருணைமல்க
கசிந்துருகிக் காசிபருங் கவசம் பாட
அட்ட வெற்றியீந்து மீசாலை தன்னில்
அமர்பாலை விநாயகரே யாடீரூஞ்சல்!

வல்லபையுந் தோழியரும் வடந்தொட்டாட்ட
வருமடியார் நினபாதம் வணங்கியேத்த
தொல்வினையு மெமை நீங்கித் தொலைந்து மேலுந்
தொடராமல் எம்பிறவி நின்தாழ் சேர
நல்ல நிதி ரெத்தினங்கள் குவிந்து தோன்ற
நல்லவரை நின்னடிக்கே விரைந்து சேர்க்கும்
அல்லலது நீக்கி மீசாலை யூரின்
அருட்பாலை விநாயகரே யாடீரூஞ்சல்!

கொம்பாலை மரந்தன்னை வெட்ட வன்று
கோடரி போட்டதுமே குருதிகாட்டி
வம்பொன்றுஞ் செய்யாது வந்துநாளும்
வணங்குங்கள் பாலைதனில் வாழ்வோமென்று
தும்பிமுக கனாவதனிற் கூறி எம்மை
துயரேது மில்லாமற் காக்கும் ஒற்றை
கொம்புடனே மீசாலையூரில் மேவு
குளிர்பாலை விநாயரே யாடீரூஞ்சல்!

தொந்தி வியிறாடத் தோளில் செவியாட
தந்தி மிகவாட தாங்கு மூஷிகமாட
நந்தி யுமையாட ஞாலமிகவாட
பந்தமிலாத் தொண்டர் பரவசமாயாட
ஐந்து கரமாட யானை முகமாட
செந்தூரந் திகழ் தேக மிகவாட
புந்தியில் வைத்துமைப் போற்றும் மீசாலையின்
புகழ்பாலை வநாயகரே யாடீரூஞ்சல்!
முதலாகி உலகெலாம் மூலமாகி
மூச்சதனின் உயிரோசை ஓமதாகி
அதிகார முத்தி நல்குமனாதியாகி
அரன்மகனாயவர் நினையு முதல்வனாகி
விதிமாற்றி யெழுதவல்ல விநாயகனாய்

விகடமதாய் விக்கினங்கள் தீர்ப்போனாகி
மதி ஞான ஒளிநல்கி மீசாலைமேவும்
பாலையடி விநாயகரே யாடீரூஞ்சல்!

சடடைமலர்ப் பதமிரண்டுங் காற்றிலாட
கனலதுவுங் குளிர் தென்றலாக்கச்
இட்முடன் மருத்துவனுங் கவரி வீச
இனிய மணிமேளம் பல்லியங்களார்ப்ப
வட்டமிடு மயில்மீது முருகனாட
வலம்வந்து மாங்கனிகள் பெற்றே நின்று
அட்டதிக்கு மாங்கனிகள் சொரி மீசாலை
அருட்பாலை விநாயகரே யாடீரூஞ்சல்!

சிவன் நோற்று திரிபுரங்கள் தனை எரிக்க
தேவியுந்தான் நின் நோன்பால் குகனைக்கண்டார்
எவன் நோற்றிடினுமோர் துன்பமொன்றும்
எப்பிறப்பிலுமெம்மை யணுகாதென்றே
கவின்பெறு மாமுனியான காசிபரும்
கவசத்திற் பாட எமைக்காக்க வென்று
இவண்மேவி எழில்மேவு மீசாலை தன்னில்
இலங்கு பாலை விநாயகரே யாடீரூஞ்சல்!

## வாழி

முப்பரி நூலும் வாழி மூஷீக மேறி வாழி
அப்பமொடவலு நல்ல அருங்கனியுண்பாய் வாழி
வெப்பொடு நோயுந் துன்பம் விலக்கிடுமேலோய் வாழி
தப்பிடா வரங்கள் நல்கு தவமுறையுடையோய் வாழி
முப்புரமெரித்தோன் வாழி முதுபெருஞ்சக்தி வாழி
சுப்பிரமணியர்வாழி சுந்தரத்திருமால் வாழி
அப்பு நல்மழையும் வாழி அருந்தவமுயல்வோர் வாழி
இப்புவியுரிரினங்கள் இன்னலின்றினிது வாழி

## எச்சரிக்கை

கஜநாயக கணபூஷித களிறே எச்சரிக்கை
கலையாதிகள் அலைபோல் தருமாதி எச்சரிக்கை
கஜலெட்சுமி மலர்கொண்டுனை கருதும் எச்சரிக்கை
கவலையறுபதமீந் தெமைக் காவாய் எச்சரிக்கை
நித்தம் நினை நினைவாரிடர் நீக்கு மெச்சரிக்கை
நிறைவே மிகு மருளீந்தெம்மை யாழ்வா யெச்சரிக்கை
என்றுமுள்ளவு வுன்பத நினைவோ மெச்சரிக்கை
துறை பாலை நிழல் பிள்ளாய் எச்சரிக்கை.
பந்த வினையகவுன்பதநினைவோமெச்சரிக்கை
பக்தா மனதுறை பாலைநிழல் பிள்ளாய் எச்சரிக்கை.

## பராக்கு

1. மூகிகமேலேறியருள் முக்கண்ணாபராக்கு
ஐந்துகரத்தும்பிமுக ஐயா பராக்கு
அத்திமுகம் கொண்ட வள்ளலே பராக்கு
அடியார் துயர் துடைக்கும் அன்புருவே பராக்கு

2. சங்கரனார் உமைமகிழும் மூத்தவனே பராக்கு
அரிகரபுத்திரனி அமுதான அண்ணலே பராக்கு
பாலையடி அமர்ந்த டையாளம் காட்டியோய பராக்கு
பத்தர்கருள பல நாமம் கொண்ட அருளே பராக்கு

3. புகர்முகம் கொண்ட புண்ணியனே பராக்கு
ஆறுதிருமுருகன் அருள் புரிந்த அண்ணலே பராக்கு
சித்தி புத்தியுடன் உறைதேவா பராக்கு
பாலையடி உறை பங்கயச் செல்வவீரா பராக்கு

## லாலி

ஓங்கார ரூபரேலாலி சுபலாலி
கற்றவர் வாழ் மீசாலையுளீர் லாலி சுபலாலி
கணபதியாம் முன்னவனே லாலி சுபலாலி
கொற்றவர்க்கருள் புரிவீர் லாலி சுபலாலி
வீதி சந்தி வீற்றிருந்தருள்புரிவீர் லாலி சுபலாலி
அறுகுமஞசள் கோமயத்துள் இருப்பவரே லாலி சுபலாலி
முக்கனிகள் விளையுமூர் பாலையடி வீற்றிருப்பவரேலாலிசுபலாலி
பாலையடி எங்கும் எழில் பொங்கவருள் புரிவீரா லாலி சுபலாலி

## மங்களம்

முன்னவற்கு மூத்தவற்கு முதல் மங்களம்
முக்கண்ணுடைய அப்பனுக்கு அருள் மங்களம்
ஆதி அந்நமல்லாத அம்மை அப்பனுக்கு மங்களம்
வள்ளி தெய்வயானை உடனுறை முருகனுக்கு மங்களம்
காவல் புரிந்[illegible] புராக்கும்
திரு பைரவர்க்கு மங்களம்
மஙகளங்கள் ஈங்களிற்கும் மாயவனார்க்கும் மங்களம்
தேவுபணி ஐங்கரர்கு ஜெய மங்களம்
இருமை நலம் தருபவர்க்கு சுப மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெயமங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுபமங்களம்



# நூற்பயன்

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனினுடங்காது
பூக் கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பமற் சார்வார் தமக்கு

### பிழைபொறுத்தல்

கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையும்நின்ஞ்செழுத்தை
சொல்லாப்பிழையும் துதியாய்ப்பிழையும் தொழப்பிழையும்
எல்லப்பிழையும் பொருத்தருள்வாய் கச்சியே கமபனே.


## வேண்டுகோள்

இந்நூலினை முழுதும் படித்து முற்று உணர்வு பெற்று நல்வாழ்வு வாழவேண்டுகிறேன். குறைநீக்க கருத்துக்கள் எனக்கு நேரடியாக எழுதி அனுப்பவும் எதிர்வரும் காலங்களில் சிறப்பாக அமைய உங்கள் கருத்துக்கள் உதவியாக அமையும் என்பதை அன்புடனும் பணிவுடனும் வேண்டுகின்றேன்.



# வாழ்த்து

வாழிநின் சேவடி போற்றி பூம்பாதவாரிசங்கள்
வாழிநின் தாண்மலர் போற்றிநின் தண்ணளி வாழிநின் சீர்
வாழிஎன் உள்ளத்தில் நியுநின் ஒற்றி மகிழ்நரும் நீ
வாழி என் ஆருயிர் வாழ்வே வடிவுடைமாணிக்கமே



வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயுதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகம் முந்துயர் தீர்கவே

வான்முகில்வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்கை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

**பொதிகை புத்தகநிலையம் & பதிப்பகம்**
**114 கண்டி வீதி சாவகச்சேரி**

# ஆலய வழிபாடு

ஆலய வழிபாட:டுக்கு செல்கின்றவர்கள் குளித்து தூய்மையான ஆடை உடுத்தி திருநீறு ருத்ராட்சம் துளசி மணி அவரவர் ஆசாரத்திற்கேற்ப அணிந்து ஆலயம் செல்வது உத்தமம்.

திருக்கோயில் முன்பு அமைந்துள்ள திருக்குளங்களில் கைகால்களை கழுவிக் கொண்டு கோபுரத்தின் முன் நின்று இரண்டு கரங்களையும் தலைக்குமேல் குவித்து அண்ணாந்து நோக்கி கோபுர தரிசனம் செய்ய வேண்டும். ஆலயங்களில் கோபரத்துக்கெதிரில் ஜீவன்களாகிய நாம் நின்றால் இறைவன் எங்கும் நிறைந்து யாவரும் காணும்படியாக இருக்கிறார். அவருக்கு எதிரே நாம் மிகவும் சிறியவர்கள் என்ற அடக்க உணர்வு ஏற்படும். பணிவு தோன்றும்.

அப்போது நம்முடைய ஆணவம் எல்லாம் ஒரு கணத்தில் அடங்கிவிடும். கோபுர உச்சியில் அமைக்கப்பட்டுள்ள செம்பு கலசங்கள் இடி, மின்னல் ஆகியவை தாக்கும் போது அதனை கிரஹித்து பூமியில் பாச்சிவிடும்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் ஆகும். கோயில் சென்று வழிபட முடியாதவர்கள் தூரத்தே நின்று கூட கோபுர வழிபாடு செயய்லாம். இது கர்ப்பக் கிரஹத்தில் இருக்கும் இறைவனை வழிபட்டதற்கு சமமாகும். கோபுரத்தை ஸ்தூலலிங்கமாகவும் இறைவனின் பாதங்களாகவும் பாவித்து வணங்கிக் கோயிலுக்குள் புகவேண்டும். கோயில்கள் நமது உடம்பின் வடிவத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதனை ஷேத்திரம் சரீரபிரஸ்தாரம் என்பர்

# இறை வழிபாடு

தினசரி ஆலயதரிசனம் செய்வோர்வாயில் இறைவன் திருநாமமும் நெஞ்சில் அந்த இறைவன் நினைவையும் நிறுத்தி கண்களை மூடி தியானம் செய்வது மிகச்சிறப்புடையது. ஆலயங்களில் காணப்படும் அமைதி மனதிற்குள் ஊடுருவும். தெய்வசக்தியை வெளிநாட்டவரே வியந்து போற்றுகின்றனர்.

சிவன் கோயிலென்றால் வில்வத்தாலும் பெருமாள் கோயிலென்றால் துளசியாலும் அர்ச்சனை செய்யவேண்டும்.

கொடிமரத்துக்கு அப்பால் விழுந்து நமஸ்க்காரம்செய்ய வேண்டும். மற்ற இடங்களில் விழுந்து கும்பிடக்கூடாது. நமஸ்க்காரம் செய்யும் போது மேற்கு அல்லது தெற்கில் கால்நீட்டல் வேண்டும்.

விநாயகர் சன்னதியில் தலையில் மூன்று முறை குட்டி 3 முறை தோப்புக்கரணம் போடவும்.

சிவஆலயங்களில் 3,5.7,9..... முறை பிரதட்சனம் செய்வது சிறப்பானது. விநாயகரை ஒரு தரமும் சூரியனை 2 தரமும், அம்பாளையும், விஷ்ணுவையும் 4 தரமும் ஆஞ்சநேயரை 5 முறையும் ।பிரதட்சணம் செய்ய வேண்டும்.

மூலவருக்கு அபிஷேகம் நடந்தால் பிரகாரத்தை சுற்றக்கூடாது. அபிசேகத்தைக் கண்டால் அலங்காரமும் பார்க்கவேண்டும்.

நமது வேண்டுதல்களையெல்லாம் கொடிமரத்தின் அருகே நின்று கேட்கவேண்டும்.
சண்டிகேசுவரரின் சன்னிதியில் நூலை கிழித்துப்போடக்கூடாது.

**பொதிகை 114 கண்டி வீதி சாவகச்சேரி**